நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, பூவிருந்தவல்லி, திருவள்ளூர் மாவட்டம்

முன்னிலை: திருமதி எம்.அமுதா, B.A.,B.L.,(Hons.,),L.L.M.,

நீதித்துறை நடுவர் எண். 1, பூவிருந்தவல்லி,

2025 ம் ஆண்டு ஜனவரி 21 ம் நாள் செவ்வாய்க்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 345/2023

**(CNR No.250006162023)**

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
T – 16 நசரத்பேட்டை காவல் நிலையம்,
குற்ற எண் 345/2023 .....குற்ற முறையிடுபவர்

.. எதிராக ..

மணி, வயது 23, த/பெ. கிருஷ்ணமூர்த்தி,
எண் 1/16, வரதராஜபுரம், ராஜீவ்காந்தி தெரு,
நசரத்பேட்டை,
சென்னை – 123. ....எதிரி–1

நிதின், வயது 27, த/பெ. ஷாஜி,
எண் 45, காமராஜர் தெரு,வரதராஜபுரம்,
நசரத்பேட்டை,
சென்னை – 123. ....எதிரி–2

ராஜ், வயது 29, த/பெ. மருதன்,
எண் 1/33, காமராஜர் தெரு, வரதராஜபுரம்,
நசரத்பேட்டை,
சென்னை – 123. ....எதிரி–3

பொன்னி, வயது 27, த/பெ. ஸ்ரீதரன்,
எண் 1/32, காமராஜர் தெரு, வரதராஜபுரம்,
நசரத்பேட்டை,
சென்னை – 123. ....எதிரி–4

இந்த வழக்கு நீதிமன்றத்தில் 11.08.2023 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் அவர்களும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆர்.ரஞ்சித்குமார் அவர்களும் முன்னிலையாகி நடைபெற்ற வழக்கில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இருதரப்பு வாதங்களையும் கேட்டு இந்நீதிமன்றம் வழங்கும்,

தீர்ப்புரை

## CASE – SUMMARY

| | | | | |
|---|---|---|---|---|
| i. | The period of remand of the accused | NIL | | |
| ii. | The date of filing of the Complaint/final report in the Court | 11.08.2023 | | |
| iii. | The date of committal of the case to the Court of Session | NIL | | |
| iv. | The date of questioning of the accused under sections 448, 294(b), 324, 326, 34 IPC of the code of Criminal Procedure, 1973, as the case may be | 19.09.2023 | | |
| v. | filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions under section 317 of the Code | | | |
| vi. | date of examination in-chief and cross-examintaion of a witness | Witness | Date of Chief examination | Date of cross examination |
| | | PW1 | 16.10.2023 | 16.10.2023 |
| | | PW2 | 16.10.2023 | 16.10.2023 |
| | | PW3 | 03.11.2023 | 03.11.2023 |
| | | PW4 | 22.11.2023 | 22.11.2023 |
| | | PW5 | 22.11.2023 | 22.11.2023 |
| | | PW6 | 07.12.2023 | 07.12.2023 |
| vii. | date of examination of the accused under section 313 of the Code | 28.10.2024 | | |
| viii. | details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and | | | |
| ix. | grant of stay by superior courts and the results thereof. | | | |

**T – 16 Nazarathpet காவல் நிலைய உதவி ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்.**

**1.** இவ்வழக்கு கு.வி.மு.ச பிரிவு 173(2) கீழ் T – 16 Nazarathpet காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். T – 16 Nazarathpet காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 09.12.2022 ம் தேதி இரவு 20.10

மணிக்கு புகார்தாரர் மற்றும் சாட்சி2 மற்றும் சாட்சி3 ஆகியோர்கள் அவர்களுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் அகரமேலில் இருந்து கம்பெனிக்கு சென்று கொண்டிருந்தபோது G.Square Volley flat அருகே 1ம் எதிரி புகார்தாரர் ஓட்டி வந்த இருசக்கரவாகனத்தின் மீது மோதியுள்ளார். இதனால் புகார்தாரருக்கு வலது கை தண்டு விரலில் காயம் ஏற்பட்டுள்ளது. பின்பு இருவரும் சமாதானமாகி சென்றுள்ளார்கள். அதனைத்தொடர்ந்து இரவு சுமார் 20.40 மணியளவில் வெங்கடேஸ்வரா புளூ மெட்டல் கம்பெனியில் இருந்தபோது 1ம் எதிரி முதல் 4ம் எதிரி வரையானவர்கள் ஒன்று சேர்ந்து புகார்தாரர் மற்றும் சாட்சி2 ஐ தாக்க வேண்டுமென்ற பொதுவான நோக்கத்துடன் புகார்தாரர் மற்றும் சாட்சி2 வேலை செய்யும் கம்பெனிக்கு சென்று அத்துமீறி நுழைந்து புகார்தாரர் மற்றும் சாட்சி2 ஐ பார்த்து "ஓத்தா தேவிடியா பசங்களா ஊர விட்டு ஊர் வந்து எங்களயா மோதுகிறாய்" என்று அசிங்கமாக திட்டி கைகளாலும், ெ ஹல்மெட்டாலும் மாறி மாறி தாக்கி புகார்தாரருக்கு கொடுங்காயமும் சாட்சி2 க்கு சொற்பகாயமும் ஏற்படுத்தி உள்ளார்கள். எனவே எதிரிகள் மீது இதச பிரிவுகள் 448, 294(b), 324, 326, IPC r/w 34 இதசவின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக T – 16 நசரத்பேட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் எதிரிகளின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் வழங்கப்படவேண்டிய நகல்களை இலவசமாக வழங்கி குற்றம் பற்றி வினவியபோது எதிரிகள் குற்றங்களை மறுத்தார். இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு எதிரிகள் குற்றம் செய்திருப்பதற்கான முகாந்திரம் இருந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 448, 294(b), 324, 326, IPC r/w 34 இதசவின் கீழ் குற்றச்சாட்டுக்கள் விளக்கிகூறி வினவியபோதும் எதிரிகள் குற்றத்தை மறுத்தார். அதனால் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ 15 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:**

**4.1** அ.சா.1 முத்து தன்னுடைய முதல் விசாரணையில் தான் குன்றத்துாரில் வசித்து

வருவதாகவும், தான் ஓட்டுநராக வேலை செய்து வருவதாகவும், கடந்த 09.10.2022 அன்று இரவு 8.20 மணிக்கு தான் தனது பணிக்காக நசரத்பேட்டைக்கு அகரம் பகுதிக்கு சென்று கொண்டிருந்தபோது இருசக்கர வாகனத்தில் எதிரே வந்த மணி என்பவர் என் மீது இடித்ததில் வலது கை கட்டைவிரலில் அடிபட்டதும் அவர் அங்கிருந்து கிளம்பி தனது வேலைக்கு சென்றுவிட்டதாகவும், அங்கு மணி என்பவர் நிகேஷ், ராஜ், பொன்னி ஆகியோரை அழைத்து வந்து தன்னிடம் ஊர்விட்டு ஊர்வந்து எங்ககிட்டயே சண்டை போடுகிறாயா என்று கூறி வார்த்தைகளை விட்டு ெஹல்மெட்டால் எதிரிகள் மாறிமாறி தன்னை தாக்கினார்கள் என்றும் பின்னர் அன்று இரவு மழை பெய்ததால் தன்னால் மருத்துவமனைக்கு செல்ல முடியவில்லை என்றும் மறுநாள் 10.10.2022 அன்று பனிமலர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாகவும் போலீசார் மருத்துவமனைக்கு வந்து தன்னிடம் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும் கூறினார். மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அசாஆ 1 என குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கருப்பு நிற ெஹல்மெட்டால் எதிரிகள் தன்னை தாக்கினார்கள் என்றும் மேற்படி ெஹல்மெட்டால் தாக்கிய எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள் என்றும் சாட்சி எதிரிகளை அடையாளம் காட்டினார். மேலும் போலீசார் தன்னை விசாரணை செய்ததாகவும் கூறியுள்ளார். மேற்படி ெஹல்மெட் ச.பொ.1 என குறியீடு செய்யப்பட்டுள்ளதாக தன்னுடைய முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துவிட்டு பின்னர் மீண்டும் குறுக்கு விசாரணையில் தான் போலீசார் கேட்டுக்கொண்டதனால் சாட்சியம் அளிப்பதாகவும் எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2** அ.சா.2 தினேஷ்பாபு தன்னுடைய முதல் விசாரணையில் தான் தட்டான்சாவடி, பாண்டிச்சேரி மாநிலத்தில் வசித்து வருவதாகவும், தான் லாரியில் கிளினராக வேலை செய்து வருவதாகவும், கடந்த 09.12.2022 அன்று இரவு சுமார் 08.10 மணியளவில் தானும் தங்களது லாரி ஓட்டுநர் முத்துவும் ஓனர் பைக்கில் வேலைக்கு சென்று கொண்டிருந்ததாகவும் அப்போது அகரம் ஜீஸ்கொயர் அருகே எதிரி மணிகண்டன் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்ததாகவும், அவர் தங்கள் மீது இடித்து விட்டதாகவும், அப்போது தங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் தாங்கள்

சென்றுவிட்டதாகவும் பின்னர் இரவு 8.40 மணியளவில் எதிரி மணிகண்டன் என்பவர் நிதின், ராஜ், பொன்னி ஆகியோரை அழைத்துக்கொண்டு தங்களது அலுவலகம் அமைந்துள்ள விக்னேஷ்வரா எண்டர்பிரைசஸ், ஏரிக்கரை ரோடு, அகரத்திற்கு வந்ததாகவும், அப்போது தங்களது ஓட்டுநர் வெளியில் வந்ததாகவும் அவரை அடித்து விட்டதாகவும் தான் சத்தம் கேட்கிறது என்று அலுவலகத்தில் இருந்து வெளியே வந்ததாகவும் அப்போது அவனும்தான் கூட இருந்தான் என்று கூறி வெளியில் இருந்து இங்கு வந்து வேலை செய்துவிட்டு எங்ககிட்ட நீங்க சண்டை வளர்க்கிறீங்களா என்று கூறி அடித்ததாகவும் அதன்பின்னர் தங்களது ஓனர் வந்துவிட்டதாகவும், அவர் போலீசுக்கு போன் செய்ததாகவும், பின்னர் மழை வந்ததால் அன்று மருத்துவமனைக்கும் காவல் நிலையத்திற்கும் செல்லவில்லை என்றும் மறுநாள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு வந்து புகார் அளித்ததாகவும் பின் நீதிமன்றத்தில் இருந்த எதிரிகளை அடையாளம் காட்டினார், பின்னர் போலீசார் தன்னை விசாரணை செய்ததாகவும் கூறிவிட்டு பின் தன்னுடைய குறுக்கு விசாரணையில் தான் சந்தேகத்தின்பேரில் புகார் அளித்ததாகவும் தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.3** அ.சா.3 நாகராஜ் தான் நசரத்பேட்டையில் வசித்து வருவதாகவும், தான் ஜல்லி விற்பனை செய்யும் வியாபாரம் செய்து வருவதாகவும், கடந்த 09.12.2022 அன்று இரவு 8.40 மணியளவில் தனது கம்பெனியான வெங்கடேஸ்வரா மெட்டல் கடைக்குள் பொன்னி, ராஜீ, மணி ஆகியோர் வந்து சண்டை போட்டதாகவும், மேற்படி நபர்கள் தங்களது கம்பெனியில் டிரைவராக இருக்கும் முத்து மற்றும் தினேஷ் என்பவர்களை அடித்ததாகவும், அதன்பின்னர் தான் போய் பார்த்து கத்த ஆரம்பித்தவுடன் மேற்படி நபர்கள் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும் மறுநாள் காலையில் மேற்படி நபர்களை மருத்துவமனையில் அனுமதித்ததாகவும் பின்னார் தான் அளித்த புகாரின்பேரில் போலீசார் விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.4** அ.சா.4 பரத் தன்னுடைய முதல் விசாரணையில் தான் அகரமேல் பகுதியில் வசித்து வருவதாகவும் கடந்த 09.12.2022 அன்று இரவு 8.00 மணியளவில் தனது ஓட்டுநர் முத்து மற்றும் கிளீனர் தினேஷ்குமாரை எதிரிகள் மணி, ராஜ், பொன்னி, நிதின் ஆகியோர் கையாலும், ெ ஹல்மெட்டாலும் அடிக்க வந்ததாகவும் பின்னர் தங்களது

ஓனர் வந்தவுடன் சென்றுவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.5** அ.சா.5 இந்துமதி தன்னுடைய முதல் விசாரணையில் தான் அகரமேல் பகுதியில் வசித்து வருவதாகவும் தங்களது கம்பெனியில் முத்து மற்றும் தினேஷ் டிரைவராக வேலை செய்வதாகவும், அவர்கள் இருவருக்கும் பக்கத்து கடையில் இருந்த நபர்களுக்கும் சிறிய பிரச்சனை ஏற்பட்டதாகவும் பின்னர் சமாதானமாக சென்றுள்ளதாகவும் பின்னர் அதில் 4 நபர்களை அழைத்து வந்து தங்களது டிரைவர்களை அடித்துள்ளதாகவும், பின்னர் இது குறித்து சிகிச்சை எடுத்துக்கொண்டு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாகவும் பின்னர் சம்பவம் குறித்து தனது கணவர் தன்னிடம் கூறியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.6** அ.சா.6 தேவராஜ் தன்னுடைய முதல் விசாரணையில் தான் அகரம் பகுதியில் வசித்து வருவதாகவும் தான் மெக்கானிக் வேலை செய்து வருவதாகவும் முத்து என்பவர் லாரி டிரைவராக வேலை பார்ப்பதாகவும் தன்னிடம் வேலை இருப்பதாக அழைத்தன்பேரில் தான் சென்றதாகவும் பின்னர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்ததாகவும் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னடையது என்றும் மேற்படி கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னடையது என்றும் மேற்படி கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.7** அ.சா.7 ராமராஸ் (உதவி ஆய்வாளர்) தான் நசரம்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும் இந்த வழக்கின் விசாரணை விபரங்கள் தனக்கு நன்கு தெரியும் என்றும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் ரவீந்திரன், காவல் ஆய்வாளர் அன்புச்செல்வி அவர்களின் கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்றும் தான் ஆவணங்களின் அடிப்படையில் கூடுதலாக சாட்சியம் அளிப்பதாகவும் கடந்த 10.12.2022 அன்று நசரத்பேட்டை காவல் நிலையத்தில் 16.00 மணியளவில் உதவி ஆய்வாளர் ரவீந்திரன் நிலைய பொறுப்பில் இருந்தபோது முன்னதாக முத்து என்பவர் பூந்தமல்லி பனிமலர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவருவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேரில் சென்று விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு

செய்ததாகவும் பின்னர் நிலையம் ஆஜராகி சண்டை வழக்கு தொடர்பான புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலையகுற்ற எண் 320/2022ல் சட்டப்பிரிவுகள் 448, 294(பி), 324, இதசவில் மணி, நிதின், ராஜ், பொம்மி ஆகியோருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து வழக்கின் விசாரணைக்கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அன்புச்செல்வி அவர்களின் பாரவைக்கு வைக்கப்பட்டதாகவும் மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அசாஆ 4 என்றும் காவல் ஆய்வாளர் அன்புச்செல்வி அவர்கள் புகார்தாரரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் சம்பவ இடம் சென்று சாட்சிகள் தேவராஜ், சாமுவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்ததாகவும் மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் முறையே அசாஆ 5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றும் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து குற்ற செயலுக்கு பயன்படுத்திய ெஹல்மட் ஒன்றினை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாகவும் மேற்படி கைப்பற்றுதல் மகசர் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றும் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளான விக்னேஷ்பாபு, நாகராஜ், பரத், இந்துமதி, பார்வை மகசர் சாட்சிகள் ஆகியோரிடத்தில் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் இவ்வழக்கின் தொடர்புடைய எதிரிகள் மணி, நிதின், ராஜ், பொம்மி கடந்த 10.12.2022 அன்று 21.00 மணியளவில் நசரத்பேட்டை சிக்னல் அருகே எதிரிகளை அடையாளம் கண்டு கைதுக்கான காரணம் கூறி கைது செய்ததாகவும் விசாரணையின் பின்பு எதிரிகள் தக்க பிணையத்தின் மூலம் நிலையத்திலே விடுவிக்கப்பட்டதாகவும் காவல் ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கின் காயம்பட்ட நபருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு வழங்கிய மற்றும் காயத்தின் தன்மை குறித்து கருத்துரை வழங்கி சொற்பகாயம் என கருத்துரை வழங்கிய பனிமலர் மருத்துவக்கல்லூாி மருத்துவமனை மருத்துவர் சிவப்பிரகாஷ் விசாரணை செய்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார். தினேஷ்பாபு என்பவருடைய விபத்துபதிவேடு மற்றும் சொற்பகாயசான்றிதழ் அசாஆ முறையே அசாஆ 8 மற்றும் 9 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றும் முத்து என்பவருடைய விபத்துபதிவேடு மற்றும் கொடுங்காயசான்றிதழ் முறையே அசாஆ 10 மற்றும் 11 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றும் இவ்வழக்கில் சம்பவ இடத்தில் சிசிடிவி

பதிவுகளை பதிவிறக்கம் செய்து சட்டப்பிரிவு 65பி இந்திய சாட்சிய சட்டம் சான்று வழங்கிய சாட்சி சுதாகரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் மேற்படி 65பி சான்றிதழ் மற்றும் சிடி அசாஆ12 மற்றும் 13 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான ெஹல்மட்டை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் படிவம் 95 அசாஆ14 ஆக குறியீடு செய்யப்பட்டது என்றும் இவ்வழக்கில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த சட்டப்பிரிவுகள் 448, 294(பி), 324, இதசவில் இருந்து சட்டப்பிரிவு 448, 294(பி), 324, 326, உ/இ 34 இதசவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்ததாகவும் மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ15 ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும் இவ்வழக்கில் காவல் ஆய்வாளர் இறுதி விசாரணை முடித்து மேற்படி எதிரிக்கு எதிராக மேற்படி மாற்றப்பட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும் காவல் ஆய்வாளர் விசாரணையின்போது அசா1 உள்ளதை உள்ளவாறே கூறியிருந்தார்கள்.

**5.** அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிரான சூழலை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(b) பிரிவின் கீழ் எதிரியிடம் வினவ எதிரி அவர்களுக்கு எதிரான சாட்சியங்கள் யாவும் பொய்யானவை என்றும், வழக்கை குறித்து வினவியபோது பொய் வழக்கு என்றும் தங்களது தரப்பில் விசாரிப்பதற்கு சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தார். மேலும் எதிரிகள் தரப்பில் விசாரிப்பதற்கு சாட்சிகள் இல்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பதிவு செய்துள்ளார்.

**6.** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பால் எதிரி மீது இதச பிரிவுகள் 448, 294(பி), 324, 326, r/w 34 இதசவின் கீழ் குற்றச்சாட்டுக்கள் அனைத்துவித ஐயப்பாட்டிற்கும் அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதா? இல்லையா? என்பதேயாகும்.

**தீர்வு:–**

**7.** அரசு தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில் கடந்த 09.12.2022ம் தேதி இரவு 20.10 மணிக்கு புகார்தாரர் மற்றும் சாட்சி2 மற்றும் சாட்சி3 ஆகியோர்கள் அவர்களுக்கு

சொந்தமான இருசக்கர வாகனத்தில் அகரமேலில் இருந்து கம்பெனிக்கு சென்று கொண்டிருந்தபோது G.Square Volley flat அருகே 1ம் எதிரி புகார்தாரர் ஓட்டி வந்த இருசக்கரவாகனத்தின் மீது மோதியுள்ளார். இதனால் புகார்தாரருக்கு வலது கை கட்டை விரலில் காயம் ஏற்பட்டுள்ளது. பின்பு இருவரும் சமாதானமாகி சென்றுள்ளார்கள். அதனைத்தொடர்ந்து இரவு சுமார் 20.40 மணியளவில் தாங்கள் பணிபுரியும் வெங்கடேஸ்வரா புளூ மெட்டல் கம்பெனியில் இருந்தபோது 1ம் எதிரி முதல் 4ம் எதிரி வரையானவர்கள் ஒன்று சேர்ந்து புகார்தாரர் மற்றும் சாட்சி2 ஐ தாக்க வேண்டுமென்ற பொதுவான நோக்கத்துடன் புகார்தாரர் மற்றும் அ.சா.2 வேலை செய்யும் கம்பெனிக்கு சென்று அத்துமீறி நுழைந்து புகார்தாரர் மற்றும் அ.சா.2 ஐ பார்த்து "ஓத்தா தேவிடியா பசங்களா ஊர விட்டு ஊர் வந்து எங்களயா மோதுகிறாய்" என்று அசிங்கமாக திட்டி கைகளாலும், ெ ஹல்மெட்டாலும் மாறி மாறி தாக்கி புகார்தாரருக்கும் அ.சா.2 க்கு கொடுங்காயமும் அ.சா.2 க்கு சொற்பகாயமும் ஏற்படுத்தி உள்ளார்கள். எனவே எதிரிகள் மீது இதச பிரிவுகள் 448, 294(b), 324, 326, IPC r/w 34 இதசவின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக T – 16 நசரத்பேட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் எதிரிகளின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று வாதிட்டார்.

**8.** மேலும், அரசு தரப்பில் அ.சா.ஆ 1 கையொப்பமிட்ட ஆவணத்தில் சம்பவத்தை அ.சா.1 விபரித்து சொல்லியுள்ளார் பார்வை மகசரில் உள்ள அசா.6ன் முதலாவது கையொப்பம் அ.சா.ஆ 2 என்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள அசா.6ன் முதலாவது கையொப்பம் அ.சா.ஆ 3 அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 4 பதிவு செய்யப்பட்டு போலீசார் சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து முறையே அவை அ.சா.ஆ 5 மற்றும் அ.சா.ஆ 6 என குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ 7 என குறியீடு செய்யப்பட்டுள்ளது. தினேஷ்பாபு என்பவரின் விபத்துப்பதிவேடு மற்றும் காயசான்றிதழ் முறையே அ.சா.ஆ 8 மற்றும் அ.சா.ஆ 9 என குறியீடு செய்யப்பட்டுள்ளது. முத்து என்பவரின் விபத்துப்பதிவேடு மற்றும் காயசான்றிதழ் முறையே அ.சா.ஆ 10 மற்றும் அ.சா.ஆ 11 என குறியீடு செய்யப்பட்டுள்ளது. 65பி சான்றிதழ் மற்றும் சிடி முறையே அ.சா.ஆ 12 மற்றும் அ.சா.ஆ 13 என குறியீடு

செய்யப்பட்டுள்ளது. படிவம்95 அ.சா.ஆ14 என குறியீடு செய்யப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ15 என குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து ச.பொ.1 என குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு சம்மந்தமாக அரசு தரப்பில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் பொழுது 1 முதல் 11 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வாக்குமூலங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் தற்போது அ.சா.1 மற்றும் அ.சா.2 சமாதானம் செய்து கொண்டபடியால் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் பட்டியலில் உள்ள 7 முதல் 11 சாட்சிகள் நீக்கப்பட்டு விட்டது என்றும், இருந்தபோதும் அ.சா.1ன் புகாரின் படியும் மற்றும் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது எதிரிகள் இதச பிரிவுகள் 448, 294(b), 324, 326 r/w 34 இதசவின் கீழ் குற்றம் புரிந்துள்ளது தெரிய வருவதாலும், எதிரிகளும், அ.சா.1ம் சமாதானமாக செல்வதாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும் அதனால் அரசு தரப்பு சாட்சிகள் வேண்டுமென்றே விசாரணையின்போது பிறழ்சாட்சியாகிவிட்டார்கள், என்றாலும் மேற்சொன்ன ஆவணங்களின் அடிப்படையிலும் அவர்களின் முரண்பட்ட சாட்சியங்களின் அடிப்படையிலும் கூட குற்றம் நிரூபிக்கப்பட்டது என்ற படியால் எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டுமென வாதிடப்பட்டது.

**9.** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில் இவ்வழக்கில் அரசு தரப்பில் சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.7 விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ15 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அ.சா.1 அவரது முதல் விசாரணையில் தான் குன்றத்தூரில் வசித்து வருவதாகவும், தான் ஓட்டுநராக வேலை செய்து வருவதாகவும், கடந்த 09.10.2022 அன்று இரவு 8.20 மணிக்கு தான் தனது பணிக்காக நசரத்பேட்டைக்கு அகரம் பகுதிக்கு சென்று கொண்டிருந்தபோது இருசக்கர வாகனத்தில் எதிரே அவர் மீது இடித்ததில் வலது கைகட்டைவிரலில் அடிபட்டதாக கூறியுள்ளார். பின் அவர் அங்கிருந்து கிளம்பி வேலைக்கு சென்றபோது, மணி என்பவர் நிகேஷ், ராஜ், பொன்னி ஆகியோரை அழைத்து வந்து தன்னிடம் ஊர்விட்டு ஊர்வந்து எங்ககிட்டயே சண்டை போடுகிறாயா என்று கூறி வார்த்தைகளை விட்டு

ெஹல்மெட்டால் எதிரிகள் மாறிமாறி தன்னை தாக்கினார்கள் என்று கூறியுள்ளார். பின்னர் அன்று இரவு மழை பெய்ததால் அவரால் மருத்துவமனைக்கு செல்ல முடியவில்லை என்றும் மறுநாள் 10.10.2022 அன்று பனிமலர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றபோது போலீசார் மருத்துவமனைக்கு வந்து அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்று கூறியுள்ளார். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அவருடையது என்று கூறியுள்ளார். நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட கருப்பு நிற ெஹல்மெட்டால்தான் எதிரிகள் அவரை தாக்கினார்கள் என்று கூறியுள்ளார். மேற்படி ெஹல்மெட்டால் தாக்கிய எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள் என்றும் அவர் எதிரிகளை அடையாளம் காட்டியுள்ளார். மேலும் போலீசார் தன்னை விசாரணை செய்ததாகவும் கூறியுள்ளார்.

10. அவ்வாறு தன்னுடைய முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துவிட்டு பின்னர் மீண்டும் குறுக்கு விசாரணையில் தான் போலீசார் கேட்டுக்கொண்டதனால் சாட்சியம் அளிப்பதாகவும் எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1ன் சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக அமைந்துள்ளது. இதனால் அ.சா.1ன் சாட்சியம் நம்பக தன்மையை இழந்து விட்டதாக கருத வேண்டும் என்று வாதிடப்பட்டது.

11. மேலும் அ.சா.2 தன்னுடைய முதல் விசாரணையில் தான் தட்டான்சாவடி, பாண்டிச்சேரி மாநிலத்தில் வசித்து வருவதாகவும், தான் லாரியில் கிளினராக வேலை செய்து வருவதாக கூறியுள்ளார். கடந்த 09.12.2022 அன்று இரவு சுமார் 08.10 மணியளவில் அவர் அவரும், லாரி ஓட்டுநர் முத்துவும் ஓனர் பைக்கில் வேலைக்கு சென்று கொண்டிருந்ததாகவும் அப்போது அகரம் ஜீஸ்கொயர் அருகே எதிரி மணிகண்டன் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு அப்போது சென்றுவிட்டு பின்னர் இரவு 8.40 மணிக்கு எதிரி மணிகண்டன் என்பவர் நிதின், ராஜ், பொன்னி ஆகியோரை அழைத்துக்கொண்டு அவர்களது அலுவலகம் அமைந்துள்ள விக்னேஷ்வரா எண்டர்பிரைசஸ், ஏரிக்கரை ரோடு, அகரத்திற்கு வந்ததாகவும், அப்போது அவர்களது ஓட்டுநர் வெளியில் வந்து அவரை அடித்ததாக கூறியுள்ளார். அவர் சத்தம் கேட்டு வெளியே வந்தபோது அவனும்தான் கூட இருந்தான் என்று கூறி "வெளியில் இருந்து இங்கு வந்து வேலை

செய்துவிட்டு எங்ககிட்ட நீங்க சண்டை வளர்க்கிறீங்களா" என்று கூறி அடித்ததாக கூறியுள்ளார். பின் ஓனர் போலீசுக்கு போன் செய்ததாகவும், பின்னர் மழை வந்ததால் அன்று மருத்துவமனைக்கும் காவல் நிலையத்திற்கும் செல்லவில்லை என்றும் மறுநாள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு வந்து புகார் அளித்ததாக கூறியுள்ளார். பின் தன்னுடைய குறுக்கு விசாரணையில் தான் சந்தேகத்தின்பேரில் புகார் அளித்ததாகவும் தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார் அ.சா.2 ன் சாட்சியத்தை பார்க்கும்போதும் அவர் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளது தெரியவருகிறது என்றும் அ.சா.2 ன் சாட்சியமும் நம்பக தன்மையை இழந்து விட்டது என்று வாதிடப்பட்டது.

12. அ.சா.3 அவர் நசரத்பேட்டையில் வசித்து, ஜல்லி விற்பனை செய்வதாக கூறியுள்ளார். கடந்த 09.12.2022 அன்று இரவு 8.40 மணியளவில் அவர் கம்பெனியான வெங்கடேஸ்வரா மெட்டல் கடைக்குள் பொன்னி, ராஜீ, மணி ஆகியோர் வந்து சண்டை போட்டதாக கூறி மேற்படி நபர்கள் அவர்களது கம்பெனியில் டிரைவராக இருக்கும் முத்து மற்றும் தினேஷ் என்பவர்களை அடித்துக்கொண்டிருந்தபோது அவர் போய் பார்த்து கத்த ஆரம்பித்ததும் மேற்படி நபர்கள் அங்கிருந்து ஓடிவிட்டதாக கூறியுள்ளார். மறுநாள் காலையில் மேற்படி நபர்களை மருத்துவமனையில் அனுமதித்ததாக கூறியுள்ளார். பின்னார் அவர் அளித்த புகாரின்பேரில் போலீசார் விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார் அ.சா.3 ன் சாட்சியத்தை பார்க்கும்போது எதிரிகள் அடித்துக்கொண்டிருந்தததாக கூறிய போது எப்படி அடித்தார்கள் என்பதை பற்றி சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.2 Helmet ல் அடித்ததாக கூறியுள்ள போது அ.சா.3 சண்டை போட்டதாகவும் அடித்ததாகவும் கூறுவது சரிவர சம்பவத்தை விவரிக்கவில்லை என்பதும் யார் யாரை அடித்தார்கள் என்பதற்கு சாட்சியம் அளிக்கவில்லை என்தால் அவரது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளகூடாது என்று வாதிடப்பட்டது.

13. அ.சா.4 அவருடைய முதல் விசாரணையில் அவர் அகரமேல் பகுதியில் வசித்து வருவதாக கூறியுள்ளார். கடந்த 09.12.2022 அன்று இரவு 8.00 மணியளவில் அவரது ஓட்டுநர் முத்து மற்றும் கிளீனர் தினேஷ்குமாரை எதிரிகள் மணி, ராஜ், பொன்னி, நிதின் ஆகியோர் கையாலும், ெ◌ ஹல்மெட்டாலும் அடிக்க வந்ததாகவும் பின்னர் அவர்களது

ஓனர் வந்தவுடன் சென்றுவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார் அ.சா.4 அவரது சாட்சியத்தில் Helmet வைத்து அடிக்க வந்ததாகவும் ஓனர் வந்தவுடன் அவர்கள் சென்று விட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளதும் அரசு வழக்கிற்கு முன்னுக்கு பின் முரணாக காணப்படுகிறது. அவரது சாட்சியத்தின் மூலம் எதிரிகள் அடிக்க முயற்சி செய்தது மட்டுமே காணப்படுகிறது.

14. அ.சா.5 அவருடைய முதல் விசாரணையில் அவர் அகரமேல் பகுதியில் வசித்து வருவதாக கூறியுள்ளார். அவர்களது கம்பெனியின் டிரைவர்களான முத்து மற்றும் தினேஷ் அவர்கள் இருவருக்கும் பக்கத்து கடையில் இருந்த நபர்களுக்கும் சிறிய பிரச்சனை ஏற்பட்டதாகவும் பின்னர் சமாதானமாக சென்றதாக கூறியுள்ளார். பின்னர் அதில் 4 நபர்களை அழைத்து வந்து அவர்களது டிரைவர்களை அடித்ததாக கூறியுள்ளார். பின்னர் இது குறித்து சிகிச்சை எடுத்துக்கொண்டு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாகவும் பின்னர் சம்பவம் குறித்து தனது கணவர் தன்னிடம் கூறியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார் அ.சா.5 ன் சாட்சியம் அவர் கேள்விப்பட்ட சங்கதியை குறித்து சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளதால் அவரது செவி வழி சாட்சியாக கருதப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டது. ஆகையால் செவிவழி சாட்சியின் சாட்சியம் செல்லத்தக்கது அல்ல.

15. அ.சா.6 அவருடைய முதல் விசாரணையில் அவர் அகரம் பகுதியில் வசித்து வருவதாக கூறியுள்ளார். அவர் மெக்கானிக் வேலை செய்வதாக கூறியுள்ளார். முத்து என்ற லாரி டிரைவராக அழைத்தன்பேரில் அவர் சென்றதாக கூறியுள்ளார். பின்னர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்ததாக கூறியுள்ளார். பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அவருடையது என்று கூறியுள்ளார். கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அவருடையது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 சாட்சியத்தின் மூலம் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆகியவை காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது தெரிய வந்துள்ளது என்று வாதிடப்பட்டது. ஆகையால் அவர்களது சாட்சியம் நம்பகத்தன்மையை இழந்து விட்டதாக கருத வேண்டும் என்று வாதிடப்பட்டது.

16. மேலும் பட்டியல் சாட்சிகளான அ.சா.7 முதல் அ.சா.11 ஆகியோர்கள் அரசுத்தரப்பால் இந்நீதிமன்றத்தில் சாட்சிகளாக விசாரிக்கப்படுவதில் இருந்து விலக்கி

கொள்ளப்பட்டார்கள். அ.சா.7 புலன் விசாரணை அதிகாரி அவர் மேற்கொண்ட புலன் விசாரணையை குறித்தும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார் என்றும் மேலும் அரசு தரப்பால் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டியவர் என்று வாதிட்டார்.

**17.** அ.சா.3 ன் சாட்சியத்தை பார்க்கையில் அவர் எதிரி அடித்துக்கொண்டிருந்ததாக கூறிய போது யார், யாரை எப்படி அடித்தார்கள், ஆயுதத்தை வைத்து தாக்கினார்கள் எவ்வாறு சம்பவம் நிகழ்ந்தது என்று விவரித்து சாட்சியம் அளிக்கவில்லை. என்பது தெரியவருகிறது. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் Helmet ஆல் அடித்ததாக கூறியுள்ளபோது அ.சா.3 சண்டை போட்டதாகவும் அடித்ததாகவும் கூறுவது சரிவர சம்பவத்தை பார்த்ததுபோல் விவரிக்காததும் யார், யாரை எவ்வாறு தாக்கினார்கள் என்பதனை கூற இயலாததும் அவரது சாட்சியம் முற்றிலும் நம்பக்கூடிய சாட்சியமாக இல்லை என்று கருதப்படுகிறது.

18. மேலும் அ.சா.4 அவரது சாட்சியத்தில் எதிரிகள் Helmet ஐ வைத்து தாக்க வந்ததாக கூறுவதும் ஓனர் வந்தவுடன் அவர்கள் சென்று விட்டார்கள் என்று கூறுவதும் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட காணப்பட்டுள்ளது. அ.சா.4 ன் சாட்சியத்தின் அடிப்படையில் பார்த்தால் குற்ற முயற்சி மட்டுமே துலங்குகிறது. ஆனால் அரசு தரப்பு வழக்கோ குற்றம் நிகழ்ந்து கொடுங்காயம் எற்பட்டதாக குற்றச்சாட்டு வனையப்படுகிறது.

19. அ.சா.5 அவர் கேள்விப்பட்ட சங்கதிகளை சாட்சியம் அளித்துள்ளதால் அவர் சாட்சியம் செவி வழி சாட்சியமாக கருதப்படுகிறது. ஆகையால் அவரது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியம் அல்ல. அ.சா.6 இவ்வழக்கில் தயார் செய்யப்பட்டுள்ள பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் ஆவார்கள். அ.சா.6 ன் சாட்சியத்தை பார்க்கையில் அ.சா.6 மேற்படி ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.6 அவர் முன்னிலையில் Helmet கைப்பற்றப்பட்டதா என்றும் சாட்சியம் அளிக்கவில்லை. ஆகையால் அ.சா.6 ன் முன்னிலையில் Helmet கைப்பற்றப்படவில்லை என்பது தெரியவருகிறது. அ.சா.6 ஐ பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் கருதப்பட்டு அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோதிலும் அவர் அரசு தரப்பிற்கு பாதகமாகவே

சாட்சியம் அளித்துள்ளார்.

20. ஆகையால் அரசு தரப்பில் இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகளான 7 முதல் 11 வரை ஆகியோர்களை அரசு தரப்பால் இந்நீதிமன்றத்தில் சாட்சிகளாக விசாரிப்பதிலிருந்து விலக்கி கொள்ளப்பட்டனர். அசா.7 புலன் விசாரணை அதிகாரி மேற்கொண்ட புலன் விசாரணையை குறித்தும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையானோர்கள் பாதிக்கப்பட்டதாகவும் அடிப்பட்ட நபர்களான அ.சா.1 மற்றும் அ.சா.2 அவர்களது சாட்சியத்தில் எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டதாகவும் எதிரிகளின் மீது மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும் அவர்களை யாரும் கட்டாயப்படுத்தியதாக சாட்சியம் அளிக்காத நிலையில், இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் வாக்குமூலம் முரண்பட காணப்பட்டுள்ளதாலும் எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கும் வகையில் தகுந்த சாட்சியங்கள் இல்லை என்று முடிவு செய்யப்படுகிறது. மேலும் காவல் உதவி ஆய்வாளரான அ.சா.1ன் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டும் குற்றம் நிரூபிக்க இயலாது என்று கருதப்படுகிறது. ஆகையால் அரசு தரப்பு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை தகுந்த சாட்சியங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டது என்ற இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**21.** மேலும், உச்சநீதிமன்றம் (2008) 4 SCC 582 ல் காணப்பட்டுள்ள Madan Mohan Abbot Vs. State of Punjab வழக்கில் கீழ்க்கண்டவாறு முடிவு செய்துள்ளது.

"It is advisable that in disputes where the question involved is of a purely personal nature, the court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings, as keeping the matter alive with no possibility of a result in favour of the prosection is a luxury which the Courts, grossly over burdened as they are, cannot afford and that the time so save can be utilized in deciding more effective and meaningful litigation. This is a commonsense approach to the matter based on the ground of realities and bereft of the technicalities of the law."

**22.** அதே போன்று, (2008)9 SCC 677 ல் காணப்பட்டுள்ள Nikhil Merchand Vs Central

Bureau of Investigation வழக்கிலும் கீழ்க்கண்டவாறு முடிவு செய்துள்ளது.

"On a overall view of the facts on compromise between the parties, by which parties have withdrawn all claims and allegations against each other, technicality should not allowed to stand in the way of quashing of criminal proceedings, since continuation of same would be a futile exercise."

**23.** ஆகையால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2)இதசவின் கீழ் குற்றச்சாட்டுகளை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பிரதிபலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரியை ஏற்கனவே எழுதிக்கொடுத்துள்ள பிணை முறியை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

**24.** இவ்வழக்கில் ச.பொ.1 சான்று பொருட்களான Helmet மேல்முறையீடு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என் சொல்லிற்கேற்ப சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எம்மால் பிழைகள் திருத்தப்பட்டு 2025ம் வருடம் ஜனவரி மாதம் 21ம் தேதியாகிய இன்று திறந்த நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

sdx/–Tmt.M.Amudha

நீதித்துறை நடுவர் எண்.I
பூந்தமல்லி

<u>பின் சேர்க்கை:</u>
<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>

அ.சா.1 முத்து
அ.சா.2 தினேஷ்பாபு
அ.சா.3 நாகராஜ்
அ.சா.4 பரத்
அ.சா.5 இந்துமதி

அ.சா.6 தேவராஜ்
அ.சா.7 ராமதாஸ்

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>

அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்
அ.சா.ஆ.2 பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம்
அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம்
அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை
அ.சா.ஆ.5 பார்வை மகசர்
அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம்
அ.சா.ஆ.7 கைப்பற்றுதல் மகசர்
அ.சா.ஆ.8 தினேஷ்பாபு விபத்து பதிவேடு
அ.சா.ஆ.9 தினேஷ்பாபு சொற்ப காயசான்றிதழ்
அ.சா.ஆ.10 தினேஷ்பாபு விபத்து பதிவேடு
அ.சா.ஆ.11 தினேஷ்பாபு சொற்ப காயசான்றிதழ்
அ.சா.ஆ.12 65 பி சான்றிதழ்
அ.சா.ஆ.13 சிடி
அ.சா.ஆ.14 படிவம் 95

<u>அரசு தரப்பு சான்று பொருள் :</u>

ெஹல்மெட்

<u>எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்று பொருள் :</u> இல்லை.

sdx/–Tmt.M.Amudha
நீதித்துறை நடுவர் எண்.I
பூந்தமல்லி

<u>பின் குறிப்பு :</u>

1. வழக்கின் முடிவு காவலருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
3. எந்த ஒரு சாட்சியையும் மூன்று நாட்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.